**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure).**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, KARUR**
**CC .No.1/2024**

Deposition of Witness : LW1 /PW1

| Name | சூர்யா | Taluk | |
|---|---|---|---|
| Husband's Name | செந்தில்குமார் | Village | |
| Age | | Calling | |
| **Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969 (Act 44 of 1969) on the day of 08.07.2026.** | | | |

**1 ம் எதிரி ஆஜர். 2 முதல் 5 எதிரிகள் ஆஜரில்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

1) நான் கரூர் டவுனில் உள்ள எனது அம்மா வீட்டில் குடியிருந்து வருகிறேன். B.C.A. படித்து முடித்துள்ளேன். நான் இந்த வழக்கில் சமாதானமாகிவிட்டேன். யாரும் என்னை கட்டாயப்படுத்தவில்லை. என் விருப்பத்தோடுதான் சமாதான மனுவில் கையொப்பம் செய்து தாக்கல் செய்துள்ளேன். ஆஜர் எதிரிகளும், நாங்களும் ஊர் பெரியவர்களின் முன்னிலையில் பேசி தீர்த்துகொண்டதுடன் எனது மகன் S.S.பிரனவின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு சமாதானமாகிவிட்டேன். திருமணத்திற்கு பின்பு ஏற்பட்ட கருத்து வேறுபாடு சம்மந்தமாக வாய்மொழியாகவும், காவல் நிலையத்தில் சொன்ன புகார் சம்பந்தமாக இந்த வழக்கில் மேல் நடவடிக்கை வேண்டாம் என்று நீதிமன்றத்தை கேட்டுகொள்கிறேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. அதன் பிறகு போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பை ஆதரிக்காததால் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு அனுமதியளிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

1) கடந்த 24.08.2020ம் தேதியன்று சிவன்மலையில் திருமணம் நடைபெற்றது என்றும், திருமணத்திற்கு பிறகு எனது மாமியாரும், மாமனாரும் சரியாக வேலை செய்யவில்லை என்று வேண்டுமென்றே திட்டி உணவு தருவதில்லை என்றும், இதை பற்றி என் கணவரிடம் கூறியபோது அவரது தாய், தந்தை சொல்வதை கேட்டு நடந்துகொள் என்று மிரட்டினார் என்றும், நான் முதன்முறையாக கருவுற்றபோது கருவை கலைக்கச் சொன்னார்கள் என்றும், ஆனால் நான் மறுத்ததால் எனது மாமனார், மாமியார் மற்றும் நாத்தனார் சபரிதேவி, அவரின் கணவர் சிவசெல்வம் ஆகியோர் தகாத வார்த்தைகளால் திட்டி, அடித்து துன்புறுத்தினர் என்றும், திருமணத்தின்போது எனக்கு சீர்வரிசையாக கொடுத்த 10 பவுன் நகையை பிடுங்கி கொண்டு 10.10.2021ம் தேதியன்று வீட்டை விட்டு துரத்திவிட்டனர் என்றும், ஊர் பெரியவர்களின் மூலமாக இதை பற்றி பேசியபோது எனது கணவருக்கு வேறு ஒரு இடத்தில் திருமணம் செய்வதற்காக பெண் பார்த்து வருகிறார்கள் என்றும், நான் அணிந்திருக்கும் தாலி செயினை கழட்டி கொண்டு வந்து கொடுக்குமாறு கூறினார்கள் என்றும், நான் 5 மாத கர்ப்பிணியாக இருந்து என்னை அடித்து உதைத்து கீழே தள்ளி இரத்த காயத்தை ஏற்படுத்தினார்கள் என்றும், இது சம்பந்தமாக அனைத்து மகளிர் காவல் நிலையம் சென்று எழுத்து மூலமான புகார் கொடுத்துவிட்டு தற்சமயம் எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டதாலும், எதிரிகளை இந்த வழக்கில் இருந்து தப்பிவிக்கும் பொருட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/– த.வாஜிதா தபசும்,
**நீதித்துறை நடுவர்,**
**கூடுதல் மகிளா நீதிமன்றம், கரூர்.**